பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

10 08 2024 **SATURDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. கேரள மாநிலம் வயநாட்டில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று ஆய்வு செய்தார்.

2. இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு ஜெ பி நட்டா கேட்டுக்கொண்டுள்ளார்.

3. ரிசர்வ் வங்கியின் மத்திய வாரிய இயக்குனர்கள் கூட்டம் நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

4. தமிழகத்தில் அனைத்துத்தரப்பினரும் பயன்பெறும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில அரசு கூறியுள்ளது.

5. பாரிஸ் ஒலிம்பிக் ஹாக்கிப் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்று புதுதில்லி திரும்பிய இந்திய அணிக்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி கேரள மாநிலம் வயநாட்டில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளை இன்று ஆய்வு செய்தார்.

ஹெலிகாப்டர் மூலம் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்த அவர், பின்னர், மீட்பு மற்றும் நிவாரணப்பணிகள் குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொள்கிறார்.

இதனைத்தொடர்ந்து, நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களை சந்திக்க உள்ள பிரதமர், பாதிப்பு குறித்து விரிவாக கேட்டறிய உள்ளார்.

முன்னதாக, கேரள சென்ற பிரதமரை கன்னூர் விமான நிலையத்தில் அம்மாநில ஆளுநர் திரு ஆரிப் முகமதுகான், முதலமைச்சர் திரு பினராயி விஜயன் ஆகியோர் வரவேற்றனர்.

<<<<<>>>>>

ரயில்வே கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக எட்டு புதிய திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு உதவிடும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், தொழில் வளர்ச்சிக்கும் இது உத்வேகம் அளிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

தோட்டப்பயிர் துறையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்த வகை செய்யும் தூய்மை பயிர் திட்டத்திற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

உயர் ரக பயிர் சாகுபடிக்கு இந்த நடவடிக்கை உதவிடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமரின் இரண்டாம் கட்ட நகர்ப்புற வீட்டுவசதித் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது எண்ணற்ற மக்களுக்கு உதவிடும் என்று கூறியுள்ளார்.

நகர்ப்புறங்களின் மேம்பாட்டிற்கும் இந்த திட்டம் உதவிகரமாக இருக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பத்து லட்சம் கோடி ரூபாய் முதலீட்டில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாகவும், இதில் 2 லட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாயை மத்திய அரசு மானியமாக வழங்க உள்ளதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

ரிசர்வ் வங்கியின் மத்திய வாரிய இயக்குனர்கள் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் ரிசர்வ் வங்கியின் கவர்னர் திரு சக்திகாந்த தாஸ் மற்றும் உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் முதல் முறையாக இந்த கூட்டம் நடைபெற்றது.

<<<<<>>>>>

நீதித்துறையில் தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு அதன் சேவையை மக்களுக்கு எளிதாக கொண்டு சேர்க்க உதவிடும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சந்திரசூட் கூறியுள்ளார்.

நீதிமன்றங்களில் தொழில்நுட்பத்தின் பயன்பாடு தொடர்பான தேசிய மாநாட்டை இன்று சண்டிகரில் தொடங்கிவைத்து பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

இதனைத்தொடர்ந்து செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில், பஞ்சாப், ஹரியானா உயர்நீதிமன்றத்தின் சார்பில் இந்த மாநாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

நாடு முழுவதிலும் இருந்து நீதிபதிகள் இதில் பங்கேற்றுள்ளதாக அவர் கூறினார்.

செயற்கை நுண்ணறிவு உட்பட தகவல் தொழில்நுட்பங்களை நீதிமன்றங்களில் பயன்படுத்துவது குறித்து இதில் விவாதிக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நீதிமன்றங்களை கணினிமயமாக்கும் திட்டத்திற்காக மத்திய அரசு ஏழாயம் கோடி ரூபாய், மாநில அரசுகளுக்கு வழங்கியுள்ளதாகவும் திரு சந்திரசூட் கூறினார்.

<<<<<>>>>>

நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதி 78 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக, பாதுகாப்புத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்த காலக்கட்டத்தில் 6 ஆயிரத்து தொள்ளாயிரத்து 15 கோடி ரூபாய் அளவிற்கு பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பபட்டுள்ளது.

இது கடந்த நிதியாண்டின் இதே காலக்கட்டத்துடன் ஒப்பிடுகையில் 3 ஆயிரத்து 865 கோடி ரூபாய் அதிகமாகும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதுகாப்புத்துறையில் சுயசார்பினை எட்ட வேண்டும் என்பதில் அரசு உறுதியுடன் உள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

தற்போதைய மக்களவையில் 280 உறுப்பினர்கள் முதல் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா கூறியுள்ளார்.

மக்களவைக்கு முதல் முதலாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கான பயிற்சி முகாமை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

அனைத்து உறுப்பினர்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தமக்கு உள்ளதாக அவர் கூறினார்

இதன் அடிப்படையிலேயே கட்சி பாகுபாடு இன்றி தாம் செயல்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அவையின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கான யோசனைகளை தெரிவிக்குமாறும் திரு ஓம். பிர்லா கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>

இல்லந்தோறும் தேசிய கொடி ஏற்றும் இயக்கத்தில் நாட்டு மக்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு ஜெ பி நட்டா கேட்டுக்கொண்டுள்ளார்.

குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் இதற்கான யாத்திரையை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

மக்கள் இயக்கமாக இது உருவெடுக்க வேண்டும் என்று பிரதமர் அழைப்பு விடுத்துள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

நேற்று தொடங்கிய இந்த இயக்கம், வரும் 15-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளதாக திரு நட்டா தெரிவித்தார்.

ஜம்மு காஷ்மீரின் புல்வாமாவில் நடைபெற்ற யாத்திரையிலும் ஏராளமானோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வுக்கு **Timor Leste**-யின் உயரிய விருது இன்று வழங்கப்பட்டது.

அரசு முறைப்பயணமாக அந்நாட்டிற்கு சென்றுள்ள திருமதி திரௌபதி முர்மு-விற்கு கல்வி, சமூக மேம்பாடு, மகளிர் மேம்பாடு ஆகியவற்றில் ஆற்றிய பணிக்காக இந்த விருது வழங்கப்பட்டது.

அந்நாட்டு அதிபர் திரு **Jose Ramos Horta** இவ்விருதினை திருமதி திரௌபதி முர்மு-வுக்கு வழங்கினார்.

இரு நாடுகளுக்கு இடையேயான நட்புணர்வின் வெளிப்பாடாக இந்த விருது உள்ளது என்று குடியரசுத் தலைவர் தெரிவித்தார்.

அந்நாட்டு அதிபர் மற்றும் பிரதமருடன், திருமதி திரௌபதி முர்மு பேச்சு நடத்தினார்.

இதன்பின்னர், குடியரசுத் தலைவர் மற்றும் அந்நாட்டு பிரதமர் முன்னிலையில் பல்வேறு ஒப்பந்தங்களும் கையெழுத்திடப்பட்டன.

பிரசார் பாரதி மற்றும் அந்நாட்டின் ஒலிபரப்பு சேவை நிறுவனத்துக்கு இடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான ஒப்பந்தமும் இதில் அடங்கும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<>>>>>**

சர்வதேச சிங்கங்கள் தினம் கொண்டாடப்படுகிறது.

சிங்கங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், அவற்றை பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் இந்த தினம் கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக 2015-ஆம் ஆண்டு 523-ஆக இருந்த சிங்கங்களின் எண்ணிக்கை, 2020-ஆம் ஆண்டு 674-ஆக அதிகரித்துள்ளதாக சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை கூறியுள்ளது.

இந்நாளையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், சிங்கங்களை பாதுகாப்பதில் மத்திய அரசு உறுதியுடன் இருப்பதாக கூறியுள்ளார்.

சர்வதேச சிங்கங்கள் கூட்டணி அமைப்புக்கு கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நடவடிக்கைக்கு பெரும்பாலான நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் திமுக அரசு செயல்படுத்திவரும் திட்டங்கள் மூலம் அனைத்துதரப்பினரும் பயனடைந்துள்ளதாக மாநில அமைச்சர் திரு மு பெ சாமிநாதன் கூறியுள்ளார்.

சேலம் போஸ் மைதானத்தில் அரசு பொருட்காட்சியை மாநில அமைச்சர் திரு கே என் நேருவுடன் இணைந்து திறந்துவைத்து அவர் பேசினார்.

அரசின் திட்டங்களை சம்பந்தப்பட்ட அனைத்துத்தரப்பினரும் முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கெணர்டார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய திரு கே என் நேரு, தமிழக அரசின் பல்வேறு திட்டங்களை எடுத்துரைக்கும் வகையிலான அரங்குகள் இதில் இடம்பெற்றிருப்பதாக தெரிவித்தார்.

<<<<<>>>>>

மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவில் உள்ள மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பயிற்சி பெண் மருத்துவர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் குறித்து சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று அம்மாநில பிஜேபி தலைவர் திரு **Suvendu Adhikari** வலியுறுத்தியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கோரிக்கையை விடுத்துள்ள அவர், சந்தேகத்திற்கு இடமான வகையில் இந்த பெண் மருத்துவர் உயிரிழந்திருப்பதாக கூறியுள்ளார்.

அவரது உடலில் காயங்கள் உள்ளதாகவும், இதுகுறித்து முழுமையான விசாரணை நடத்த வேண்டியது அவசியமாகிறது என்றும் திரு **Suvendu Adhikari** தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

பங்களாதேஷில் நிலவிவரும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு நாகாலாந்தில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக, காவல்துறை அதிகாரிகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று அம்மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

வழக்கத்திற்கு மாறான நடவடிக்கைகள் குறித்து உடனுக்குடன் தகவல் தெரிவிக்குமாறு கிராம குழுக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் நாகாலாந்து அரசு கூறியுள்ளது.

<<<<<>>>>>

பேராசிரியர் நியமனத்தில் முறைகேடு நடந்துள்ளதாக 2018-ஆம் ஆண்டு அளித்த புகார் மீது சென்னை பல்கலைக்கழகம் விசாரணை நடத்துமாறு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான மனுவினை விசாரணை செய்த பொறுப்பு தலைமை நீதிபதி திரு கிருஷ்ணகுமார், நீதிபதி பாலாஜி அமர்வு இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

விசாரணையில் முறைகேடுகள் நடந்தது கண்டுபிடிக்கப்பட்டால், உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நடைமுறையை ஆறு மாதத்திற்குள் முடிக்க வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பாரிஸ் ஒலிம்பிக் ஹாக்கிப் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்ற இந்திய அணி இன்று புதுதில்லி திரும்பியது.

விமான நிலையத்தில் இந்திய அணியினருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

*(சவுண்ட் பைட் - வரவேற்பு - 13 செகண்ட்ஸ்)*

மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா வீரர்களை சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

ஹாக்கி அணியின் சாதனையை கண்டு நாடு பெருமிதம் கொண்டுள்ளதாகவும் திரு மன்சுக் மாண்டவியா கூறினார்.

இன்று நடைபெறவுள்ள மகளிர் 76 கிலோ எடைப்பிரிவு மல்யுத்தப் போட்டியின் முதல் சுற்று ஆட்டத்தில், இந்தியாவின் **Ritika** ஹங்கேரியின் **Bernadett Nagy**-ஐ எதிர்கொள்கிறார்.

பிற்பகல் மூன்று மணிக்கு இப்போட்டி தொடங்குகிறது.

<<<<<END>>>>>